# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS 270 of 2004 | **PW - 1** | **:** | Cross |
| **Name** | தமிழ் | **Father Name** | **:** | தனபால் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.01.2026 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 01.24 PM

1,3,5,9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

(3) தாவா சொத்து ஆதியில் வேங்கா கவுண்டருக்கு பாதிக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான் . வேங்கை கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு பெண் மற்றும் மூன்று ஆண் நபர்கள் அவர்களது பெயர் அங்கம்மாள், குப்பன், காளி கவுண்டர், பத்தா என்கிற பச்சையப்ப கவுண்டர் ஆவர்கள். காளி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு நபர்கள் அவர்களது பெயர் துரைசாமி என்கிற கோவிந்த், தர்மன், அழகேசன், நடராஜ் மற்றும் மகள்கள் பெயர் தெரியாது இரண்டு மகள்கள் உள்ளனர். அவரது மகள்கள் பெயர் ராஜாமணி கௌரம்மாள் என்று சொன்னால் சரிதான் . பத்தா என்கிற பச்சையப்ப கவுண்டர் என்பவர் என்னுடைய தாத்தா. அவருக்கு ஒரு ஆண் மற்றும் மூன்று பெண் வாரிசுகள். அந்த ஒரு ஆண் எனது அப்பா தனபால் என்று சொன்னால் சரிதான். மூன்று பெண்கள் பெயர் காசி அம்மாள், தெய்வானை, சரோஜா என்று சொன்னால் சரிதான். மேற்படி காளி கவுண்டரின் மகள்கள் ராஜாமணி, கௌரம்மாள் ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாத்தாவின் வாரிசுகளான தெய்வானை, சரோஜா, காசி அம்மாள் ஆகியோரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றால் மேற்படி நபர்களை அவசியத்தரப்பினர்களாக

சேர்த்து தான் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் அவர்களை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வேங்கா கவுண்டர் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார் என்றால் சுமார் 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு இறந்திருப்பார். வேங்கா கவுண்டர் உயிரோடு இருந்த சமயத்திலேயே அவரது மூன்று மகன்களுக்கு மட்டும் சொத்துக்களை பிரித்துக் கொடுத்து வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்று சொன்னால் சரிதான் பிரித்துக் கொடுத்து பட்டாவும் வந்துவிட்டது. அதன்படி எனது தாத்தா பச்சையப்பா கவுண்டருக்கும் தனி பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான்.

(4) தாவா இரண்டாம் இன சொத்தானது காளி கவுண்டருக்கும் எனது தாத்தா பச்சையப்பா கவுண்டருக்கும் மட்டும்தான் கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான்மேற்படி கூட்டு நிலத்தை இருவரும் பிரித்துக் கொண்டனர் என்று சொன்னால் சரியல்ல கூட்டாக தான் உள்ளது. தாவா இரண்டாம் இன சர்வே எண் 2/1 சொத்தானது காளி கவுண்டருக்கு பாதிக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. அது நில உரிமை மேம்பாட்டு திட்டம் சமயத்திலேயே காளி கவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் அவர்கள் மாற்றிக்கொண்டனர். தாவா ஒன்றாம் இன சர்வே எண் 84/1A, 1E சொத்தானது வேங்கா கவுண்டர் உயிரோடு இருந்த சமயத்திலேயே குப்பா கவுண்டருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். ஆனால் தற்போது மேற்படி சர்வே எண் நிலங்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் அது எங்களுக்கு பாத்தியப்பட்டதுதான். தாவா இரண்டாம் இன சர்வே எண் 2/1-க்கு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது குப்பா கவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் தாவாவில் குப்பா கவுண்டருக்கு வாரிசு எதுவும் இல்லை என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். குப்பா கவுண்டருக்கு சென்னகிருஷ்ணன் என்பவர் வாரிசாக உள்ளார் என்று

சொன்னால் இல்லை. சென்னகிருஷ்ணன் திருமணமாகி அவர் தற்போது இறந்துவிட்டார் அவருக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர் என்று சொன்னால் தெரியவில்லை. இவ்வாறான நிலையில் குப்பா கவுண்டரின் வாரிசு விவரங்களை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. குப்பா கவுண்டர் நிலத்தை காளி கவுண்டர் விலைக்கு வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல காளி கவுண்டர் மற்றும் பத்தா கவுண்டர் இருவருமே விலைக்கு வாங்கினர். நான் சொல்வது தவறு காளி கவுண்டர் மட்டுமே குப்பா கவுண்டர் நிலத்தை விலைக்கு வாங்கினார் பத்தா கவுண்டர் வாங்கி இருந்தால் எந்தெந்த சர்வே எண்கள் வாங்கினார் என்று குறிப்பிட்டு எங்கள் தாவாவில் கூறியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

(5) அவ்வாறு குப்பா கவுண்டரிடமிருந்து பத்தாக்கவுண்டர் விலைக்கு வாங்கியதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. குப்பா கவுண்டரிடமிருந்து காளி கவுண்டர் வாங்கி விட்டதால் அவருக்கே கிணற்றில் இரண்டு பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை எனது தகப்பனார்தான் தாக்கல் செய்தார் அவர் இறந்துவிட்ட பின்பு நாங்கள் இந்த வழக்கை நடத்துகிறோம். வழக்கிற்கு பின்னிட்டு கடந்த 06.10.2017 தேதியில் எங்கள் குடும்பத்திற்குள் ஆவண எண். 3415/ 2017 என்ற ஆவணத்தின் படி நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையை அனுசரித்து எனது அண்ணா மாது அவரது மனைவி கவிதாவிற்கு ஆவண எண். 4858/2022 என்ற ஆவணப்படி சர்வே எண் 85/2A நிலத்தை தான செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எங்கள் பாகப்பிரிவினை அனுசரித்து சர்வே எண். 85/2 என்பது சர்வே எண் 85/2A, 2B, 2C, 2D என உட்பிரிவு செய்து வருவாய் துறையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதன்பின்னிட்டு கடந்த 09.12.2022 தேதியில் வாதிகளாகிய நாங்களும்

பிரதிவாதிகளும் சேர்ந்து சர்வே எண் 85/2C நிலத்தில் ஒரு விவசாய வண்டி வழி பாதை ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி பதிவு செய்து கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். தாவா இரண்டாம் இன சொத்து சர்வே எண் 2/1 நிலம் 1-ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சர்வே எண். 2/1 நிலம் தற்போது பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தெரியும். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட விவரங்களை தாவாவில் குறிப்பிட்டு திருத்தப்பாடு செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சாட்சி பதில் எதுவும் கூறாமல் அமைதியாக உள்ளார். மேற்படி ஆவணங்களை மறைத்து மோசடியாக வழக்கை நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**முடிவு நேரம் – 01.59 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.